தரம் -13 தவணை -05 பாடம் -இந்துநாகரிகம் நேரம் -3மணித்தியாலம்

சுட்டெண் - ......................

## இந்துநாகரிகம் - ii

பகுதி 'அ'லிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி'ஆ'லிருந்து மூன்று வினாக்களையம் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

### பகுதி'அ'

(01)இந்துநாகரிக வரலாற்றில் வேதஇலக்கியங்கள் பெறும் மக்கியத்துவத்தை பின்வருவனவற்றின் அடிப்படையில் தெளிவுபடுத்துக.

அ) வேதங்களின் அமைப்பு ஆ) கடவுட்கோட்பாடு

இ) அரசியல்கருத்துக்கள் ஈ) பிற்காலமுக்கியத்துவம்

(02)இந்துநாகரிகவரலாற்றில் ஆகமங்களின் முக்கியத்துவத்தை பின்வரும் அடிப்படையில் தெளிவுபடுத்துக

ஆ) ஆகமங்களின் அமைப்பு ஆ) கோயில் அமைப்பும் திருவுருவ வழிபாடும்

இ) மெய்யியற்சிந்தனைகள் ஈ) இந்துநாகரிகவளர்ச்சியில் ஆகமங்களின் பங்களிப்பு

(03)இந்துசமய சமூகமறுமலர்ச்சிக்கு பிரமசமாஜத்தின் பணிகளை பின்வரும் அடிப்படையில தெளிவுபடுத்துக.

அ) பிரமசமாஜம் தோற்றம் பெற்ற சூழ்நிலை ஆ) சமயப்பணிகள்

இ) சமூகப்பணிகள் ஈ) கல்விப்பணிகள்

### பகுதி 'ஆ'

(04)இந்துதத்துவத்தில் உபநிடதங்களின் பங்களிப்பை மேல்வரும் விடயங்களில் விபரிக்குக.

அ) பிரமம் தொடர்பான சிந்தனைகள் ஆ) ஆன்மா பற்றிய கருத்துக்கள்.

(05) சைவசித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படையம்சங்களை பின்வரும் வகையில் தெளிவுபடுத்துக

அ) பதியின் இயல்புகள் இலக்கணங்கள் ஆ) பதி-பசுதொடர்புகள்

(06)இலங்கையில் பொலநறுவைக்காலம் பற்றி பின்வரும் விடயங்களில் ஆராய்க

அ) காலச்சூழலும் சாண்றாதாரங்களும் ஆ) திருக்கோயில்களின் வளர்ச்சி

(07) சோழர்கால கட்டடக்கலை பற்றி பின்வரும் விடயங்களில் ஆராய்க

அ)கட்டடக்கலை வளர்ச்சிக் கட்டங்கள் ஆ)சோழமன்னர்கள் அமைத்த பிரதான கோயில்கள்.

(08) இந்துதத்துவ சிந்தனையில் பகவத்கீதை பெறும் முக்கியத்துவத்தை பின்வரும் அடிப்படையில் தெளிவுபடுத்துக

அ)தோற்றம்பெற்ற சூழ்நிலை ஆ)பகவத்கீதையில் கூறப்பட்ட மெய்யியற் சிந்தனைகள

தரம் -13(2020)    தவணை -05    பாடம் -இந்துநாகரிகம்

## புள்ளித்திட்டம்

### பகுதி -'அ'

(01

அ) வேதங்களின் அமைப்பு

வேதகாலம் கி.மு.1500 - கி.மு600வரை, நான்கு வேதங்கள், நான்கு பகுதிகள், மூன்றுகாண்டங்கள், ஆறுஅங்கங்கள், மறுபெயர்கள்.

ஆ) கடவுட்கோட்பாடு

ஆரம்பத்தில் பயத்தின் அடிப்படையில் இயற்கையை வழிபடல், இயற்கையம்சங்கள் நாளடைவிர் தெய்வங்களாக உயர்வு பெற்றமை, மூன்றுலக ெய்வங்களாக பிரித்து வழிபடப்பட்டமை, சந்தர்ப்பவாதக் கொள்கை, ஒருதெய்வக் கோட்பாடு'ஏகம் சத்விப்ரா வகுதா வாந்தி'

இ)அரசியல் கருத்துக்கள்

வேதகாலமக்கள் குழுக்களாக வாழ்ந்தனர், அதனை அடுத்து குழுத்தலைவர்கள் அரசர்களாக உயர்வு பெற்றனர், அரசன் பற்றிய பெயர்கள், அரசனுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு, அரசனது அதிகாரங்கள், வாழ்விடங்கள், அவனுடன் தொடர்புடைய நிறுவனங்கள்.

ஈ)பிற்கால முக்கியத்துவம்

துத்துவநூல்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னோடி, பிற்காலத்தில் வைதீகமரபுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பல தோண்றுவதற்கு முன்னோடி, தர்மசாஸ்திரங்கள், தர்மசூத்திரங்கள், புராணங்கள் இதிகாசங்கள் போன்றன உருவாக்கத்திற்கு வேதங்களுக்கு முக்கிய பங்குண்டு, பிற்காலத்தில் எழுந்த துதிப்பாடல்களுக்கு முன்னோடி.

(02)

அ) ஆகமங்களின் அமைப்பு

இரணடுகாண்டங்கள், நான்கு பாதங்கள், அவைகூறும் விடயங்கள் சுருக்கம்

ஆ) கோயில் அமைப்பும் திருவுருவ வழிபாடும்

ஆகமங்கள் ஆலயவழிபாட்டை மையப்படுத்தியே எல்லா அம்சங்களையும் விதிப்படி விளக்குவன, ஆலய அமைப்பு, திருவுருவ அமைப்புப் பற்றி சிவாகமங்களின் சரியாபாதம் கூறும். கர்சணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் என கிரியைகளை ஆகமம் வகைப்படுத்துதல், கிரியை முறைகள் பற்றிய விளக்கங்கள். சிவாச்சாரியார்கள், அடியார்கள் தொடர்பான நியமங்கள்.

இ) மெய்யியற் சிந்தனைகள்

ஞானகாண்டத்தில் அடங்கும் யோக ஞான பாதங்கள் மெய்யியற் சிந்தனைகளைக் கொண்டவை, பதி,பசு, பாசம் பற்றிய கருத்துக்கள். அவற்றின் இயல்புகள், இலக்கணங்கள் தொடர்பானவை. ஆன்மவிடுதலை, விடுதலைக்கான நாற்பாதங்கள், ஆலயவழிபாடு.

ஈ) இந்துநாகரிக வளர்ச்சியில் ஆகமங்களின் பங்களிப்பு

சுமயம்,கலை,தத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சியில் சிவாகமங்களின் பங்களிப்பு. வழிபாடுகள், அனுட்டாணங்கள்,கட்டட, சிற்ப, விக்கிரகக் கலைகளுக்கு ஆதாரமாக அமைந்தவை. ஆகமங்களே

ஆகமவிதிகளுக்கு அமைய ஆலயங்களும் சிற்பவிக்கிரகங்களும் அமைக்கப்பட்டன, சைவசித்தாந்தம் கோட்பாட்டு ரீதியில் வளர்ச்சி பெறுவதற்கு உரைப்பிரமாணமாக ஆகமங்கள் அமைந்தன. சிவஞான போதம் ரௌரவ அகமத்தின் மொழிபெயர்ப்பாக அமைதல்.

(03)

அ) பிரமசமாஜம் தோற்றம் பெற்ற சூழ்நிலை

ஐரோப்பியர் வருகையால் இனம்,மதம்,மொழி,கலை, கலாசாரங்கள் பின்னடைவு, மூடப்பழக்கவழக்கம், , வறுமை, தொற்றுநோய்கள் பரவியமை, வெகுசனத்தொடர்பின்மை, கல்வியறிவின்மை, வேலைவாய்ப்பின்மை.

ஆ) சமயப்பணிகள்

உபநிடதங்களுக்கு முதன்மை கொடுத்தல். உருவ வழிபாடு, பல இறைக்கொள்கையை மறுத்தமை, சமயக்கண்டனங்கள், அவர் இயற்றிய நூல்களும் வெளிப்படும் சமய சிந்தனைகளும்.

இ)சமுகப்பணிகள்

சமுகச்சீர்கேடுகளை எதிர்த்தமை, பெண்விடுதலைக்கு முதன்மை கொடுத்தல், உடன்கட்டை ஏறுதல் தடைச்சட்டம் தொடர்பானவை.

ஈ) கல்விப்பணிகள்

மேலைத்தேய கல்விக்கு முதன்மையளித்தல், ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல், விதப்புரைகள் செய்தமை.

பகுதி-ஆ

(04)

அ) பிரமம் தொடர்பான சிந்தனைகள்

பிரமம் பற்றி விளக்குவதற்கு பலவழிமுறைகளை உபநிடத ஆசிரியர்கள் கையாண்டமை. பிரமத்தின் இயல்புகள், நிர்க்குண, சகுண இலக்கணங்கள், பிரமத்திற்கும், பிரபஞ்சம், ஆன்மா, ஆகியவற்றுக்குமிடையிலான தொடர்புகள்.

ஆ) ஆன்மா பற்றிய கருத்துக்கள்

பரமாத்மா சகுணநிலையில் சீவாத்மாவாகத் தோண்றுதல். சூக்குமமான கட்புலனாகாத குதிரை வண்டியை இழுப்பது போல ஆன்மா உடம்பை இயக்குதல். ஆன்மா அவஸ்தைகளுக்கு உட்படுதல். வினைகளை ஆற்றி பிறவிகள் வீடுபேற்றை அடையும் நிலை. பிரமத்துடன் இரண்டறக்கலந்த நிலையை முத்தி எனல். சீவன் முத்தி, விதேக முத்தி பற்றிய சிந்தனைகள். முத்திக்கு ஞானமே சிறந்தவழி என்னும் கருத்துக்கள்.

(05)

அ) பதியின் இயல்புகள் இலக்கணங்கள்

பதி உண்மையை நிறுவுதல். சொருப, தடத்த நிலைகள். சிவனின் எண்குணங்கள், மூவகைத்திருமேனிகள், ஐந்தொழில்கள் தொடர்பான சிந்தனைகள், மெய்கண்டசாஸ்திரங்களிலிருந்து உதாரணங்களைக் கையாள்தல்.

ஆ) பதி-பசுத் தொடர்புகள்

சிவன் ஆன்மாக்களின் பொருட்டு படைத்தல் முதலான தொழில்களை ஆற்றுதல். தனு, கரணம் முதலானவற்றைக் கொடுத்தல். முத்திக்கு வழிப்படுத்தி முத்திப்பேற்றைக் கொடுத்தல் முதலானவை.

(06)

அ)காலச்சூழலும் சாண்றாதாரங்களும்

கி.பி 9-கி.பி15ஆம் நூற்றாண்டு வரை. சோமன்னர்களின் பேரரசு விரிவாக்கத்தையடுத்து இலங்கையும் சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ்வந்தது. இலங்கைமும்முடிச்சோழமண்டலம் எனவும், பொலநறுவை ஜனநாதமங்களம் எனவும் அழைக்கப்பட்டன. தமிழகத்தில் இலங்கை கொண்ட தொடர்பால் பொலநறுவையிலும் நாட்டின் ஏனைய பகுதியிலும் இந்துப்கண்பாடு வளர்ச்சி கண்டது.

இலக்கிய ஆதாரங்கள்- மகாவம்சம், சூழவம்சம், ராஜவலிய, தட்சனகைலாயகராணம்.

தொதல்பொருட்கள்- கட்டடங்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள்.

ஆ) திருக்கோயில்களின் வளர்ச்சி

பொலநறுவையில் பதினாறு இந்து ஆலயங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை. அவற்றுள் சிவன்கோயில்-10, விஸ்ணுகோயில்-05. காளிகோயில-01. நாட்டின் ஏனைய பகுதிகளில் வளர்ச்சி கண்ட ஆலயங்கள் திருக்கோணேஸ்வரம், விக்கிரமசோழேஸ்வரம், உத்தமசோழேஸ்வரம், பண்டிதசோழேஸ்வரம். குளக்கோட்டன் திருக்கோணேஸ்வர ஆலயத்தை புணர்நிர்மானம் செய்தமை. தாழிக்குமரன் திருக்கேதீஸ்வர ஆலயத்தை புணர்நிர்மாணம் செய்தமை, ஆலயங்களுக்குத் தானம் வழங்கியமை, ஆகமவிதிப்படி பூ சைகளைச்செய்தமை.

(7) அ)கட்டடக்கலையின் பிரதான வளர்ச்சிக் கட்டங்கள்

1. முற்கால சோழர்பாணி-கி.பி 850-985 வரை. விஜயாலயன்-பராந்தகன் வரையிலான கோயில்கள். புல்லவர் காலக்கோயில்களைப் போல் அளவில் சிறியவை. புல்லவர்காலக் கட்டடக் கலையின் தொடர்ச்சி. நார்த்தாமலைவிஜயாலயசோழேச்சரம், புதுக்கோட்டைமூவர்கோயில்.

2. இடைக்கால சோழர் பாணி-கி.பி985-1070 வரை.ராஜராஜன்-ராஜேந்நிரன் வரை. சோழர்கால கட்டடக்கலையின் உச்ச நிலையைக் காட்டுவது. தஞ்சைப்பெரங்கோயில், கங்கைகொண்டசோழேஸ்வரம்.

3. பிற்கால சோழர் பாணி- கி.பி 1070-1270 வரை.முதலாம் குலோத்துங்கன்-மூன்றாம்ராஜேந்திரன் வரை. சோழர்காலக் கட்டடக் கலையின் முதிர்ச்சியைக் காட்டுவதுடன் விஜயநகரநாயக்கரகால கட்டடக்கலை வளர்ச்சிக்கு முன்னோடி. சிதம்பரம், ஐராவதேஸ்வரம், திரிபுவனம்.

ஆ) சோழமன்னர்கள் அமைத்த கோயில்கள்

சோழமன்னர்கள் அமைத்த கோயில்களான நார்த்தாமலைவிஜயாலயசோழேச்சரம். புதுக்கோட்டை மூவர்கோயில், தஞ்சைப்பெருங்கோயில, கங்கைகொண்டசோழேஸ்வரம், சிதம்பரம், ஐராவதேஸ்வரம், திரிபவனம் போன்ற கோயிலகள் பற்றி அவற்றின் பகுதிகள். ஆவற்றின் சிறப்பம்சங்கள், கட்டப்பட்டதன் நோக்கம், விமானம், சிற்பங்கள் பற்றி குறிப்பிடப்பட வேண்டும்.

(8) அ) பகவத்கீதை தோற்றம் பெற்ற சூழ்நிலை

குருசேத்திரப் போரில் அருச்சுனனுக்கு கிருஸ்ணரால் உபதேசிக்கப்பட்டது. மாபாரதத்தின் பீஷ்ம பருவத்தில் 25 அத்தியாயத்தில் இருந்து 42 அத்தியாயம் வரையில் உள்ளது 18 அத்தியாயங்களைக் கொண்டது. 18 அத்தியாயங்களும் 700 சுலோகங்களைக் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. 18 அத்தியாயங்களும் 18 யோகங்களின் பெயர்களால் குறிப்பிடப்படகின்றன. 18 யோகங்களும் கர்மயோகம், பக்தியோகம், ஞானயொகம்

என்னும் மூன்றுயோகங்களின் ஊடாக மெய்யியற் சிந்தனைகளையம் ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிகளையும் விபரிக்கின்றன.. உபநிடதங்களுக்கு ஒப்பாகத் தோண்றிய ஒரு இலக்கிய வடிவம்.

ஆ) மெய்யியற் சிந்தனைகள்

புகவத்கீதையில் கூறப்பட்டுள்ள பரம்பொருள், கடவுள். ஆன்மா, கன்மம். மறுபிறப்பு. உலகம். ஆறம், விடுதலை தொடர்பான காத்துக்களை குறிப்பிட்டு விளக்குதல் வேண்டும்.